1975 நவம்பர் 10]

* 271 வினா—திரு. எம். முத்தையா: மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், கோவில்பட்டி வட்டம், கயத்தாரில் உள்ள சிவன் கோயில் திருப்பணி அறநிலையத் துறையின்கீழ் எடுத்துச் செய்யும் உத்தேசம் ஏதேனும் உள்ளதா?

(இ) ஆமெனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: (அ) ஆம்.

(இ) இத்திருக்கோயிலுக்கு 1964 ஆம் ஆண்டு ஒரு திருப்பணிக் குழு அமைக்கப்பட்டது. அது முறையாக செயல்படவில்லை. ஆதலால் திருப்பணி வேலைகள் தொடர்ந்து செய்ய, திருப்பணிக் குழுவை திருத்தி அமைக்கவோ அல்லது புதிய குழுவை அமைக்கவோ உதவி ஆணையருக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. மேலும் தேவையான மதிப்பீடுகள் தயார் செய்து ஒப்புதல் பெற அறநிலைய உதவி ஆணையர் கோரப்பட்டிருக்கிறார்.

இராமேஸ்வரம் கோயில்

* 272 வினா—திரு. த. சோனையா: மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1975 ஆம் ஆண்டில் இராமேஸ்வரம் கோயில் கும்பாபிஷேகத்திற்கான அரசு செலவு எவ்வளவு?

(இ) அதற்கென வசூலிக்கப்பட்ட தொகை என்ன?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: (அ) இராமேஸ்வரம் குடமுழுக்கு விழாவிற்காக அரசு ஒன்றும் செலவு செய்யவில்லை.

(இ) வசூலிக்கப்பட்ட தொகை ரூ. 3,06,951-22

* 273 வினா—திரு. வ. முத்து: மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்ட அரிசன நலத்துறை அலுவலகத்தை தனிக் கட்டடத்திற்கு மாற்றும் திட்டம் ஏதேனும் உண்டா?

மாண்புமிகு திரு. என். இராசாங்கம்: இல்லை.